Y.M.C.A


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 254 ஆங்கீரச ஆடி 32 (16.08.1992) ஞாயிறு


## ஷெல் தாக்கி கணவன் காயம் மனைவி தற்கொலை

ஷெல் தாக்குதலினால் தனது கணவனும் இறந்துவிட்டதாக கிடைத்த தவறான தகவலால் மனைவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒட்டுமடத்தில் நேற்றுக் காலை நிகழ்ந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் காயமடைந்த இராசையா இராசகுலசிங்கம் என்பவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவர் இறந்துவிட்டதாக எண்ணி மனைவியான இராசலட்சுமி இராசகுலசிங்கம் (21) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். இவர்கள் வேலணை 2 ஆம் வட்டாரத்தில் இருந்து இடம் —04 பக்கம் பார்க்க

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

# ஏழு பொலிஸார் பலி!

## நான்கு பொலிஸாரை காணவில்லை

**மட்டக்களப்பில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலினால் ஏழு ஸ்ரீலங்கா பொலிஸார் கொல்லப்பட்டனர் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன பாதுகாப்பு அமைச்சும் இச்சம்பவத்தை ஒப்புக் கொண்டுள்ளது நான்கு பொலிஸாரைககாணவில்லை எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.**

மட்டக்களப்பு 36 ஆம் கட்டையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் கடைகளை அகற்ற வந்த பொலிஸார் மீதே இவ்வதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் மூன்று நிமிடங்களில் நடத்தப்பட்ட இத் தாக்குதல்களின் போது ரீ 56 ரக துப்பாக்கிகள் ஆறு, நடுத்தர ரவைகள் 806, ரவைக்கூடுகள் 24 சப்பாத்துக்கள் ரவைக்கூடு அணிகள் 6, தொப்பிகள் மற்றும் ராணுவ உபகரணங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

மட்டக்களப்பு - பதுளை வீதி சந்தியில் உள்ள இராணுவ முகாமிலிருந்து பொலிஸாருக்கு உதவிக்கு வந்த படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இங்கு நீண்ட நேரம் சண்டை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ★ வெளிநாடு செல்ல பணம் கொடுத்தவரை முகவர் மிரட்டினார்

வெளிநாடு செல்வதற்காக முகவரிடம் பணம் கட்டியவர் பணத்தைத் திருப்பிக் கேட்கப் போன போது இரகசியப் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுக்கப் போவதாக மிரட்டிய சம்பவம் சமீபத்தில் நிகழ்ந்துள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த ஒருவர் பெருந் தொகையான பணத்தை முகவரிடம் கொடுத்து மிக நீண்டகாலமாகியும் வெளி நாட்டுக்கு அனுப்பாததால் கொழும்பில் தொழில் பார்க்கும் அந்த முகவரிடம் பல தடவைகள் பணத்தைத் திருப்பிப் பெறச் சென்றுள்ளார்.

கடைசியாகச் சென்ற போது தன்னிடம் பணம் கேட்டதாகப் பொலிசுக்கு முறையிடப் போவதாக முகவர் மிரட்டியதால் பீதியடைந்து போய் பணம் இன்றி யாழ் திரும்பியுள்ளார் கோபாய் வாசி (35)

## ஷெல் வீச்சு

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் காரைநகர் திகை முகாம்களில் இருந்து இராணுவத்தினர் சென்னாலை நடுவடு நிலை போன்ற பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற் கொண்டனர். 50

## குமண கப்பல் பயணம்

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து இன்று குமண கப்பல் புறப்பட்டு செல்கிறது.

கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சைபெற அறுநோயாளர்களும் இக்கப்பலில் பயணமாவார். தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. 07

## கோமாரி வருகிறது

கொழும்பில் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கோமாரி கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் அரிசி, சீனி மாவு மற்றும் சவர்க்காரம், மண்ணெண்ணெய் ஆகியன எடுத்துவரப்படுகிறது, 07

## கலிபர் தாக்குதல்

நேற்று மாலை 6 மணியளவில் மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் யாழ் குடியிருப்பு பகுதிகளை நோக்கி 50 கலிபர் தாக்குதல்களை நடத்தினார்கள்.

நண்பகல் தீவகத்தில் இருந்தும் படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது 19

## ஷெல் தாக்கி காயமடைந்த குழந்தை நேற்று மரணம்

நேற்று முன்தினமிரவு தீவுப் பகுதி முகாம்களில் இருந்து யாழ் ஒட்டுமடம் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது பலத்த காயங்களுக்குள்ளான யாழ் வைத்தியசாலை அதிதீவிரசிகிச்சைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த 3 வயது குழந்தை நேற்று அதிகாலை மரணமானது.

வேலணை இரண்டாம் வட்டாரத்தைச்சேர்ந்த பத்திநாதர் - மங்கையர்க்கரசி தம்பதிகளின் குழந்தையே மரணமானது. 07

## ● முதல்வர் ஜெயலலிதா பேச்சு

## கச்சதீவை திரும்பப்பெறவேண்டும் பிரிவினை உணர்வு நசுக்கப்படும்

இலங்கைக்கு கொடுக்கப்பட்ட கச்சதீவைமீண்டும் பாரதத்துடன் இணைக்க வேண்டும் என நேற்று இந்திய சுதந்திர தினத்தையொட்டி புனிஜோர்ஜ் கோட்டையில்தேசிய கொடியை ஏற்றி வைத்துப் பேசிய தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறினார்

தமிழக சட்டசபை இதுபற்றி தீர்மானம் இயற்றியது பற்றி நினைவுபடுத்திய முதல்வர் ஜெயலலிதா பிரதமர் இதை ஆழ்ந்தும் விரிவாகவும் பரிசிலிப்பதாக தமக்கு அறிவித்திருப்பதாகவும் தெரிவித்தார்

காவிரி நீர்ப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தின் சாதகமான தீர்ப்பை சுட்டிக்காட்டி இந்த ஜீவாதார பிரச்சினையில் வெற்றியடைந்தே தீருவோம்

நாட்டை துண்டாட வேண்டும் என்ற தீயஉணர்வு தோன்றும் போதெல்லாம் அதை வேரோடு கிள்ளியெறிய தமிழக அரசு தயங்காது என்றும் முதல்வர் ஜெயலலிதா கூறினார்,

## ஆப்கான் சண்டையை நிறுத்த ஐ. நா விடம் கோரிக்கை

ஆப்கானிஸ்தானில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் குழு சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதில் உதவிடுமாறும் ஆப்கான் அரசு ஐ நா மன்றத்தை கேட்டுக்கொண்டிருக்கிறது

அமைதி காக்கும் படையையும் மனிதாபிமான உதவிகளையும் ஐ நா மன்றம் அனுப்பவேண்டும் என்றும் ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சகல குழுக்களும் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என ஐ நா செயலர் பூட்றோஸ் காலி வேண்டுகோள் விடுத்துள்ளார்

குல்புதீன் ஹெக்மத்தியார் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தை ஆப்கான் அரசு ஏற்கவில்லையென்பதால் யுத்த நிறுத்தம் தொடரும் சாத்தியம் இல்லை என கருதப்படுகிறது.

## ★ கல்வித்திணைக்களம்

## கடன் வழங்குவதில் இடம்பெயர்ந்தோருக்கு சலுகை

யாழ் கல்வித்திணைக்களத்தினால் ஆசிரியர்கள், மற்றும் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஆறுமாத சம்பள முற்பணக் கடன்களை வழங்கும் நடவடிக்கை துரிதகதியில் நடைபெற்று வருகின்றது

இக்கடன்களை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களை பரிசீலிப்பதற்கு ... 4 ஆம் பக்கம் பார்க்க

பொதுவான குறிக்கோளை எட்ட

## ஸ்ரீலங்கா- இந்தியா பரஸ்பர ஒத்துழைப்பு- தூதுவர் ஜா

'ஸ்ரீலங்காவும், இந்தியாவும் தமது நீண்டகால நெருக்கமான பொதுவான குறிக்கோளை வென்றெடுக்க ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் ஒத்தாசை புரிந்து வருகின்றன.'

இவ்வாறு ஸ்ரீலங்காவுக்கான இந்தியத் தூதர் என் என் ஜா இந்தியாவின் 45 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரப் பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம்

மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியங்களுக்கு சுகாதார சேவை பணிப்பாளர்கள் பதவிக்கு வெற்றிடங்கள் இருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேபோல வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவிக்கும் வெற்றிடம் உள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 1 ஆம் திகதி வரை அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவையில் உள்ள ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 47

## தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழி தினவிழா

கல்முனை கல்விமாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் சிங்கள மொழிதின விழாவை அடுத்த மாதம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சுமார் ஏழு பாடசாலைகளில் இருந்து போட்டிக்கு மாணவர்கள் பங்குபற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது நிந்தவூர் கல்விக் கோட்டத் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள மொழித் தினப் போட்டி அண்மையில் நடைபெற்றுள்ளது. 47

கேட்டினைத் தவிர்க்க காட்டினை வளர்ப்போம்.

# இவ்வார இராசிபலன்

**16.08.1992 - 22.08.1992**

நல்லூர் சோதிடர் இ. மகாதேவா

### மேடம்

உங்களுக்கு எதிர்பாராத சம்பவங்கள் ஏற்படும் குடும்பத்தினரின் நன்மை தீமை மனதில் பதட்டம் கொடுக்கும். கொடுக்கல், வாங்கல் பேச்சுவார்த்தைகளை நிதானமாகச் செயற்படுத்துவதனால் இலாபங்கள் அடைவீர்கள், தொழில்ஸ்தானத்தில் திருப்திகரமான பலாபலன்களை எதிர்பார்க்க முடியாது, உறவினர்கள் உதவுவதால் ஓரளவு ஆறுதல் அடைவீர்கள்.

### இடபம்

உங்களுக்கு இடமாற்றங்கள் சகஜம் சிலருக்கு கை, கால் தாக்கங்கள், காயங்கள் வர இடம் உண்டு. உறவினர்களுடன் மனக்கசப்புகள் ஏற்படும் தொழில் ஸ்தானத்தில் உதவிகள். மேலதிகாரிகளின் ஆதரவுகள் கிடைக்கும் பெரியவர்களுடன் பக்குவமாக நடக்கவும். கொடுக்கல் வாங்கலால் நன்மைகள் உண்டு.

### மிதுனம்

உங்களுக்கு அடிக்கடி அலைச்சலும், களைப்பும் ஏற்படும். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரமாட்டாது. குடும்பத்தினரின் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். பெரியவர்களும், நண்பர்களும் பல உதவிகளைச் செய்து தருவார்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மைகளும், உதவிகளும் எதிர்பாராமல் கிடைக்கும்.

### கடகம்

உங்களுக்கு இந்த வாரம் படபடப்பாக இருக்கும், பொருள் இழப்பு அல்லது களவுபோக இடம் உண்டு. உறவினர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்பட இடம் உண்டு. வயிறு, கை, கால் வருத்தங்கள் வரலாம். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளானாலும் நண்பர்கள் உதவி செய்வார்கள். 16 ஆம் திகதி நல்லதல்ல, கவனமாக இருக்கவும்.

### சிங்கம்

உங்களுக்கு குடும்பத்தில் அபிப்பிராயபேதங்கள் ஏற்படும் பொருள் நஷ்டமும், மனவேதனையும் கொடுக்கும் அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும் எதிர்ப்பாளரால் உதவிகள் கிடைக்கலாம். அலைச்சலும், விரோதமும் சர்வ சாதாரணம் தொழில் ஸ்தானத்தில் செயற்பாடுகளால் புதிய வேகம் ஏற்படும் 17, 18 ஆம் திகதிகளில் போக்குவரத்தில் அவதானமாக இருக்கவும்.

### கன்னி

உங்களுக்கு இடமாற்றத்தால் நன்மைகள் ஏற்படும் கை, கால் தாக்கம். காய்ச்சல் சிலருக்கு கொடுக்கலாம் நண்பர்களாலும், பெண்களாலும் உதவிகள் கிடைக்கும் தொழில் ஸ்தானத்தில் குறை கேட்க நேரிட்டாலும் பெரிய பாதிப்புக்கள் வர இடம் இல்லை 19, 20 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் செய்யாமல் இருப்பது நன்மை தரும்.

### துலாம்

உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்படும் எதிர்பாராத உடல் நிலைத் தாக்கங்கள் சிலருக்குக் கொடுக்கலாம் தொழில் ஸ்தானத்தில் 21 22 ஆம் திகதிகளில் வாக்குவாதங்கள். பிரச்சினைகள் ஏற்படலாம் அவதானமாக சமாளித்துக் கொள்ளலாம் கொடுக்கல், வாங்கல்களையும், பிரயாணங்களையும் கூடிய மட்டும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### விருச்சிகம்

உங்களுக்கு மனக் குழப்பம் அலைச்சல் உடல்நிலைத் தாக்கம் இதில் ஏதாவதொன்றால் கஷ்டப்பட இடமுண்டு சகோதரங்களுக்கு மாற்றங்கள், கஷ்டங்கள் கொடுக்கும் தொழில் ஸ்தானத்தில் பொருள் இழப்பு ஏற்படும் வாகனங்களில் பிரயாணம் செய்யும் பொழுது அவதானமாக இருக்கவும் 18, 19 ஆம் திகதிகளில் பிரயாணத்தை தவிர்த்துக் கொள்ளவும்.

### தனு

உங்களுக்கும் நண்பர்களுக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். பொருளால் வேதனை ஏற்படும் களவுபோக இடமுண்டு. நீங்கள் எதிர்பாராமல் பெரியவர்கள் சில உதவிகளைச் செய்வார்கள் சிலருக்கு உடல் நிலைத் தாக்கம் ஏற்படும். அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் மற்றவர்களின் பொறுப்புக்களை எடுத்து அவதிப்படுவீர்கள்.

### மகரம்

உங்களுக்கு எக்காரியத்திலும் தடையும், தாமதமும் ஏற்பட்டபடி இருக்கும் நண்பர்களின் உதவியால் நன்மைகள் ஏற்படும் தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கண்டனத்திற்கு ஆளாவீர்கள் குடும்பச் செலவுகள் கட்டுமீறி இருக்கும் இடமாற்றமும், அலைச்சலும் சிலருக்கு கொடுக்கலாம்.

### கும்பம்

உங்களுக்கு எதிர்பாராத உடல் உபாதைகள் ஏற்படலாம் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். எதிர்ப்பாளரால் அவமானங்களும், மனக்கவலைகளும் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் வீண் பழி சுமத்துவார்கள். காணி பூமி சம்பந்தமான மாற்றங்களும் பொருள் இழப்புகளும் சிலருக்குக் கொடுக்க இடமுண்டு. 16 18 20 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கலோ போக்குவரத்தோ செய்யாதீர்கள்.

### மீனம்

உங்களுக்கு கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத நிலையே ஏற்படும். சகோதரங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். அயலவர்களாலும், மறைமுக எதிரிகளாலும் வேதனை ஏற்படும். பொருள் இழப்பு சிலருக்குக் கொடுக்கலாம் தொழில் ஸ்தானத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். 17 18, 19 ஆம் திகதிகளில் போக்குவரத்தைத் தவிர்க்கவும்.

## இந்திய உப- ஜனாதிபதி தேர்தல்

# நரசிம்மராவின்சாணக்கியமும், சாதுர்யமும்

எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி இந்திய உப-ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

ராஜதந்திரியாகவிருந்து அரசியல்வாதியாக மாறிய கே. ஆர். நாராயணனும். காகா ஜொகிந்தர் சிங்கும் இப் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த காகா ஜொகிந்தர் சிங் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டவர் போட்டியிடவேண்டும் என்பதற்காகவே போட்டியிடுபவர் எனப் பெயர் பெற்றவர்.

இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர்கள் மட்டும் வாக்களிக்கும் இத் தேர்தலில் திரு கே ஆர். நாராயணன் வெற்றி பெறுவது என்பது முடிந்த முடிவாகும். இவரது சார்பில் நான்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காங்கிரஸ்(ஐ) சார்பில் குலாம் நபி ஆசாத்தும், பாரதிய ஜனதாக் கட்சி சார்பில் எல். கே. அத்வானியும், ஜனதா தளம் மற்றும் தேசிய முன்னணி சார்பில் வி. பி. சிங்கும். ஏனைய கட்சிகள் சார்பில் சந்திரசேகரும், கே. ஆர். நாராயணன் சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

அநேகமாக இது ஒரு ஏகமனதான தெரிவுதான். காகா ஜொகிந்தர் சிங் போட்டியிடுவதன் மூலம் அந்த நிலையை இல்லாமல் செய்துள்ளார்.

ஜூன் பதின்மூன்றாம் திகதிய முரசொலியில் இந்திய ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதி தேர்தல்களில் பின்பற்றப்படும், மரபு பற்றிக் குறிப்பிடப்பட்டது.

ஜனாதிபதி வட நாட்டைச் சேர்ந்தவராக இருந்தால் உப ஜனாதிபதி தென்னகத்தைச் சேர்ந்தவராக இருப்பதும், ஜனாதிபதி தென்னகத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் உப ஜனாதிபதி வடநாட்டைச் சேர்ந்தவராகவும் இருப்பது ஒரு மரபாக இருந்து வந்துள்ளது.

இம்முறை வட நாட்டைச் சேர்ந்த சங்கர்தயாள் சர்மா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டபடியால் தென்னகத்தைச் சேர்ந்த ஒருவரையே உப- ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டிய மரபுத் தேவை இருந்தது.

தென் மாநிலங்களைப் பொறுத்தவரை ஆந்திரா, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி மற்றும் உப- ஜனாதிபதி பதவியை வகித்துள்ளனர்.

ஆனால் கேரளத்திலிருந்து எவரும் இதுவரை இப்பதவிகளை வகிக்கவில்லை எனவே கேரளத்திலிருந்து ஒருவர் உப ஜனாதிபதி பதவிக்கு தெரிவு

எஸ். ஜி. எம்

செய்யப்பட வேண்டியதும் மரபுத் தேவையாக இருந்தது.

இந்த நிலையில் கேரளாவைச் சேர்ந்த கே ஆர் நாராயணனின் பெயரும், இந்திரா காந்தியின் முதன்மைச் செயலாளராகவும், தமிழகத்தின் முன்னாள் ஆளுநராகவும் பதவி வகித்த அலெக்சாண்டரின் பெயரும் பலமாக பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தன.

திரு. அலெக்சாண்டர் பிரதமர் நரசிம்மராவுடன் மிக நெருங்கியவர் என்பதை அண்மைக்கால டெல்லி நடவடிக்கைகள் உணர்த்தின மந்திரி சபையை மாற்றி அமைப்பதற்கும் நிர்வாக அதிகாரிகளை மாற்றுவதற்கும் பிரதமர் நரசிம்மராவ் அலெக்சாண்டரிடம் ஆலோசனை பெற்றது சகலருக்கும் தெரிந்த விடயமாகவிருந்தது.

சில அமைச்சகங்களையும் நிர்வாகத்தையும் மற்றி அமைப்பதற்கான ஆலோசனை அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பும் பிரதமரால் அலெக்சாண்டரிடம் கொடுக்கப்பட்டது, எனவே அலெக்சாண்டர் அந்தப் பணியில் ஈடுபட்ட காரணத்தால் உப- ஜனாதிபதி பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படவில்லை எனக் கருதப்படுகின்றது.

இந்த நிலையில்தான் இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினராகவிருக்கும் கேரளாவைச் சேர்ந்த கே.ஆர் நாராயணனை பிரதமர் நரசிம்மராவ் தெரிந்தெடுத்தார்,

திரு கே.ஆர். நாராயணன் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்.

எனவே திரு கே ஆர் நாராயணனை தெரிவு செய்ததன் மூலம் இரண்டு விடயங்களை மிக சாதுரியமாக சாதித்துள்ளார்.

முதலாவதாக இதுவரை பின்பற்றப்பட்ட மரபு மீறப்படாமல் பார்த்துக்கொண்டது.

இரண்டாவதாக சகல கட்சிகளையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த சுமார் நூறு பாராளுமன்ற உறுப்பினர்களும், இடதுசாரி முன்னணி, தேசிய முன்னணி போன்ற கட்சிகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரே உப- ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் என முன் வைத்த கோரிக்கை,

இவற்றின் காரணமாகத்தான் தெரிவு செய்த கே.ஆர். நாராயணனை ஓர் கருத்தொற்றுமை வேட்பாளர் நிலைக்கு இட்டுச் சென்று நான்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கும் பிரதமர் வழி வகுத்துள்ளார்

இந்த விடயத்தில் பிரதமர் நரசிம்மராவ் அரசியல் சாணக்கியத்துடனும், சாதுரியத்துடனும் செயற்பட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

## விலை நிர்ணயம் சங்கங்களுக்கே

யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் அறிவிக்கப்பட்ட சில பொருள்களுக்கான விலை நிர்ணயம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பொருள்களுக்கே பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயம் தனியார் வர்த்தகர்களுக்கு பொருந்தாது என செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது

## லலித் பயணம்

லலித் அத்துலத் முதலியும் அவரது மனைவியும், மகனும் ஐரோப்பாவுக்குப் பயணமானார்கள்.

## விளையாட்டு விழா

பெரிய விளான் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தின் 28 ஆம் வருட நிறைவு விழாவும் கழகத்தின் மறைந்த முக்கிய உறுப்பினர் இரத்தினம் லோகநாதனின் ஞாபகார்த்தமாகவும் இன்று விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் வெ. எட்வேட் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். (50)

## நாடகப் பயிற்சிப் பட்டறையை பண்பாட்டுக்கழகம் நடத்தும்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவினர் வடமராட்சியில் நாடக பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாகவும், புதிய கலைஞர்களைத் தோற்றுவிக்குமுகமாகவும் நடத்தப்படவுள்ள மேற்படி நாடகப் பயிற்சிப் பட்டறையில் நாடகத்துறையில் ஆர்வம் கொண்ட ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்

சிறந்த பயிற்சியாளர்கள், கலை நெறியாளர்கள், ஒப்பனையாளர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள உள்ள ஆண் பெண் இருபாலாரும் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள், கலைபண்பாட்டுக் கழகம், வடமராட்சி, வதிரி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அச்சுவேலி தெ. ப. கூ. சங்கம் பனை வெல்லம் தயாரிப்பு

அச்சுவேலி தென்னை பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் உற்பத்தி செய்யும் பனை வெல்லத்தையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து வருகின்றன.

இந்த வெல்லத்துக்குப் பாவனையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருப்பதாக தெரிகிறது!

இதேவேளை இச்சங்கம் தென்னங்கள்ளை போத்தலில் அடைத்து விற்பனைக்கு விடுவதற்கு எண்ணியுள்ளது.

இப்படிச் செய்வதனால் மேலதிகக் கள்ளு [illegible] நஷ்டத்தைத் தவிர்க்க உதவும் எனவும் கூறப்படுகிறது.

(73)

★ எழுதுநர் பரீட்சை விண்ணப்பம்

# 21ஆம் திகதி வரையும் அரச அதிபருக்கு அனுப்பலாம்

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைக்கும் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் சேவைக்கும் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு அரசாங்க அதிபர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புவதாயின் இம்மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இன்று அல்லது நாளை வரவுள்ள "குமண" கப்பல் 23 அல்லது 24இல் திரும்பிச் செல்லுமென எதிர்பார்க்கப்படுவதனால் அந்தக் கப்பலில் கிடைக்கப்பெறும் சகல விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 21ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அரசாங்க அதிபருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும்படியும் அவர் தெரிவிக்கிறார்.

இத்திகதிக்குப் பின்னர் விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை நேரடியாக பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் (47

★ சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர்

# போட்டிப்பரீட்சை விண்ணப்ப திகதி 31 வரை நீடிப்பு

அரசாங்க சேவையில் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் ஆகியோரை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலக்கெடு இம் மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைக்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான திகதியை இம் மாத முடிவுவரை நீடிக்குமாறு சகல தபாலதிபர்களுக்கும், உப தபாலதிபர்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது.

# சிக்கல் நிறைந்த பிரச்சினைகளை ஒத்திப்போட நரசிம்மராவ் கோரிக்கை

சிக்கல் நிறைந்த ஒற்றுமையை பாதிக்கும் பிரச்சினைகளை மூன்று வருடங்களுக்கு தள்ளிப் போட வேண்டும் என இந்தியாவின் 46 வது சுதந்திரதினத்தையொட்டி டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றிவைத்து உரையாற்றிய பிரதமர் நரசிம்மராவ் கூறினார்.

வளர்ச்சிப் பணியில் நாடு செலுத்தும் ஒருங்கிணைந்த கவனம் சிதறாது போகாமல் இருக்க அமைதி காண்பதற்கான செயல்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் சமாதானச் சூழல் பேணப்படவேண்டும் எனவும் கூறினார்.

இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு மக்களையும் எல்லா அரசியல் கட்சிகளையும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையில் குறிப்பிட்ட பிரச்சினைகளில் கேள்வி எழுப்பாது இருக்கும் படி அரசியல் கட்சிகளை பிரதம மந்திரி கேட்டுக் கொண்டிருப்பது மக்கள் எதிர் நோக்கியுள்ள மிக முக்கியமான பிரச்சினைகளுக்காக அரசியல் கட்சிகளை தடுப்பதற்கான சாட்டாகும் என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியுள்ளது.

# ஜேம்ஸ் பேக்கர் வெள்ளை மாளிகைக்கு

அமெரிக்க வெளியுறவு செயலர் ஜேம்ஸ் பேக்கர் ஆளணி பிரதானியாக வெள்ளைமாளிகைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தமது தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஜேம்ஸ் பேக்கர் கூடுதலாக உதவுவார் எனக் கருதியே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இந்த மாற்றத்தை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சூழல் பாதுகாப்புப் போட்டியில் பரிசிற்குத் தெரிவானோர் விவரம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினரால் நடத்தப்பட்ட சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பரிசிற்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவர்களின் விபரம் வருமாறு:- க. சுமதி, கோயில் வீதி, யாழ்ப்பாணம், கு. சுதன், கொக்குவில் குருநகர், கா. பிறேமசுதா, வதிரயன் வடக்கு, நா. விக்னேஸ்வரன், புறாப் பொறுக்கி, யாழ்ப்பாணம், த. கிருஷ்ணபவன், நல்லையன் வீதி, ஜெயபுரம், த. ரேணுகா, பிள்ளையார் கோயிலடி, இமையாணன் மேற்கு, வை. வைதேகி, கட்டைப்பிராய், ச. கெங்காதரன் அச்சுவேலி வடக்கு, வே. ஸ்ரீகுலரஜனி, ஏரந்தனை, புத்தூர் வடக்கு, க. இளமதி கலைமணி ஒழுங்கை, கட்டைப்பிராய்.

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சூழல் மாசடைதல், கடற்கரை, நீர்ப்பயன்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகப் போட்டி நடத்தப்பட்டது. மேலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதி காடு வளர்ப்புத் திட்டங்களையும், வீதியோர மரநடுகை முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 16 08- 92 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# உப உணவுப் பொருள்கள் விவசாயிகளிடம் கொள்வனவு

யாழ் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து குரக்கன்மா, பயறு, எள்ளு ஆகிய உபஉணவுப்பொருள்களை பின்வரும் விலையில் கொள்வனவு செய்து பலநோ. கூ. சங்கங்களின் ஊடாக விற்பனை செய்வதற்குரிய சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

தற்போது இவ் உபஉணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கென யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பலநோ. கூ. சங்கங்களே தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

உணவு முத்திரைக்கு மட்டும் தான் இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதோடு ஏழை மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் எனவும் மாணவர் உணவுமுத்திரைக்கு இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்படமாட்டாது எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

| பொருள்கள் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| குரக்கன் மா | 26 00 ரூபா | 35 00 ரூபா |
| பயறு | 25 00 ரூபா | 28 00 ரூபா |
| எள்ளு | 20.00 ரூபா | 23 00 ரூபா |

(47)

★ ஹெல உறுமயவை கட்டுப்படுத்த

# சுதந்திரக்கட்சி நடவடிக்கை எடுக்காவிடின் தமிழ் மக்கள் நம்பிக்கையிழப்பர்

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பொன்றை ஏற்படுவதில் ஹெல உறுமயவின் கொள்கைகள் இடைஞ்சலாக இருந்தாலும் கூட்டமைப்பு உருவாகியே உள்ளது.

சகல எதிர்க்கட்சிகளும் முன்பு ஒன்றிணைந்து இருந்தன ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி போன்ற தமிழ்க்கட்சிகள் இக் கூட்டணியில் சேர்க்கப்படுவதை ஹெல உறுமய விரும்பாதது எல்லா எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க முடியாததற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இளவாதக்குழு - ஹெல உறுமய - பலம் கொண்டதாக செயற்படுவது பற்றி கேட்கப்பட்டபோது அதற்கு ஒரு பெரிய பலம் இல்லையென திரு. நாணயக்கார கூறினார்.

எனினும் இவ்வாறு செயற்படும் சிலருக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி எடுக்காவிட்டால் தமிழ் மக்கள் எதிரணி கூட்டமைப்பில் நம்பிக்கை வைக்க மாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

## சகலசேவைக்கால ஆசிரிய ஆலோசகர்க்கு

1985 ஆம் ஆண்டு தொடக்கம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாக இருந்தவர்களும் வேறு காரணங்களால் தொடராமல் இடையில் விலகியவர்களும், தத்தம் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சந்திக்கும். அவர்கள் சேவைக்கால ஆலோசகர்கள் தொடர்பாக வழங்கவிருக்கும் படிவங்களை பூரணப்படுத்தி மீள அவரிடமே கையளிக்குமாறு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## குலேந்திரன் பற்றிய நூல்

ரேயர் சபாபதி குலேந்திரனின் வாழ்க்கை வரலாறு நூலுருப் பெறுகின்றது.

இந்த நூலினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் எழுதியுள்ளார்.

இந்த நூல் வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது 18

## ஷெல் தாக்கி...

பெயர்ந்து வந்து இங்கு தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண் ஆண்குழந்தை ஒன்றை பிரசவித்து பத்தொன்பது நாள்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது: 19. 07

## கடன்...

அனுப்பி வைக்குமாறு உரிய கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் யாழ் பிரதேச கல்விப்பணிமனையினால் கோரப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பள முற்பணக் கடன்களை வழங்குவதில் தெல்லிப்பழை, காரைநகர், வேலணை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளதாகவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 14

# யாழ். மாவட்ட பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி

இவ்வருட யாழ் மாவட்டம் பாடசாலைகளுக்கிடையேயான 17, 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மிகவும் சிறப்பாக நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விடயம் சம்பந்தமான கூட்டத்தில் இதற்கென ஒரு விசேட ஒழுங்குக் குழுவும் நியமிக்கப்பட்டது.

போட்டிகளை லீக்முறையில் நடத்துவதெனவும், ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் முதல் நான்கு இடங்களையும் பெறும் அணிகள் மாவட்டப் போட்டியில் பங்குபற்றும்.

கோட்டத்திற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிலிருந்து செப்டம்பர் 1ஆம் திகதிக்கு முன்பதாக அக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளருக்குக் கிடைத்தல்வேண்டும். கோட்டப் போட்டிகள் செப்டம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகும் இப் போட்டிகளில் ஒழுங்குகளை இதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழு மேற்கொண்டுள்ளது என யாழ். மாவட்ட உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா தெரிவித்துள்ளார்.

★ ஜனதாதள உறுப்பினர்க்கு இட ஒதுக்கம்

# சபாநாயகரின முடிவை எதிர்க்கட்சிகள் கண்டனம்

ஜனதாதள் கட்சியின் பிரச்சினைகள் குறித்த லோக்சபா சபாநாயகர் சிவராஜ் பாட்டீல் எடுத்துள்ள முடிவை தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் குறை கூறியுள்ளன.

தம்மிடம் இல்லாத அதிகாரத்தை சபாநாயகர் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாக முடிவு எடுப்பதற்கு முன்பே முன்னையஜனதாதள் உறுப்பினர்களை தனியே அமர அனுமதித்திருக்கிறார் என்றும் இங்கு புதுடில்லியில் நடந்த கூட்டத்தில் இக்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

உறுப்பினர்களின் பதவி நீக்கம் பற்றி தீர்மானிக்கவே அரசியல் சாசனத்தின் பத்தாவது அட்டவணை சபாநாயகருக்கு அதிகாரமளிக்கிறது என்றும் சபையில் இட ஒதுக்கீடு குறித்து முடிவெடுப்பதற்கு அல்ல என்றும் இக்கட்சிகள் கூறியுள்ளன.

வெளியேற்றப்பட்ட எட்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட இருபது உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட ஆசனங்களை ஒதுக்குவது என சபாநாயகர் இடைக்கால முடிவு எடுத்தது நீதியை கேலிக்குரியதாக்குவதாகும் என்று இக்கட்சிகள் தெரிவித்தன.

இதற்கிடையில் இந்த இருபது உறுப்பினர்களின் ஆதரவையும் காங்கிரஸ் கட்சி பெற்று விட்டால் ஒரேயடியாக அது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெற்று விடும் என கருதப்படுகிறது.

## காரியாலயம்

யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் காரியாலயம் ஒன்று கொழும்பில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள பழைய மாணவர்களது வேண்டுகோளுக்கிணங்கவே இந்தக் காரியாலயம் திறக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. 18